1979 மார்ச் 19]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: எல்லாப் பிரச்சினைகளையும் பேசி தீர்த்து விட முடியும் என்று நம்பிக்கை வைத்திருக்கிறேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) ஆடு, மாடுகள் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்பெறுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்ததாக, திருவாளர்கள், கூத்தகுடி சண்முகம், மெ. சிவசாமி, சேலம் மு. ஆறுமுகம், கே. பண்ணைசேதுராமன் ஆகியோர் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனை குறித்து மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார்கள். திரு. கூத்தகுடி சண்முகம் அவர்கள்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்; தலைவர் அவர்களே, ''கடந்த சில மாதங்களாக தமிழ்நாட்டிலிருந்து ஏராளமான மாடுகள் கேரளாவிற்கும், ஆடுகள் ஆந்திராவிற்கும் அனுப்பப் படுவதால். தமிழ்நாட்டில் மாடுகளின் விலையும், ஆட்டு இறைச்சியின் விலையும் கூடுதலாயிருப்பது குறித்து.'' பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பேரவைத் தலைவர் அவர்களே!

1974 ஆம் ஆண்டு கால்நடை கணக்கின்படி தமிழ்நாட்டில் மொத்தம் 234 இலட்சம் கால்நடைகள் உள்ளன. இவற்றில் கால்நடை மற்றும் எருமைகள் 134.2 இலட்சம், செம்மறியாடு மற்றும் வெள்ளாடுகள் 93.4 இலட்சம்.

நமது மாநிலத்திலிருந்து கறவை மாடுகளும் இழுவை மாடுகளும் வெளி மாநிலங்களுக்கு, குறிப்பாக கேரள மாநிலத்திற்கு இறைச்சிக்காக பெரும் அளவில் கொண்டு செல்லப்படுவதாக முறையீடுகள் அரசுக்கு 1974 ஆம் ஆண்டில் வந்தன.

1974-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தமிழ் நாடு பால்வள நிறுவன நிர்வாக இயக்குநர், ஓராண்டு காலமாக நல்ல கறவை மாடுகளின் விலை ஏறிக்கொண்டு வருவதாகவும், நல்ல கலப்பின கறவை மாடுகள் நீலகிரியிலிருந்து, கேரளம், கர்நாடகம், மற்றும் ஏனைய மாநிலங்களுக்கு கொண்டு செல்லப்படுவதாகவும் தெரிவித்தார். ஆதலால் இம்மாநிலத்தில் இருந்து பிற மாநிலங்களுக்கு கால் நடைகள் கொண்டு செல்லப்படுவதைக் கட்டுப்படுத்த சட்டமியற்ற வேண்டுமென கருத்துத் தெரிவித்தார்.

[செல்வி பி. டி. சரஸ்வதி] [1979 மார்ச் 19

கால்நடைப் பராமரிப்புத் துறை இயக்குநரைக் கலந்து ஆலோசித்து, மாநிலங்களுக்கிடையே கால்நடைப் போக்கு வரத்தினைத் தடை செய்வதற்கான சட்டமியற்ற 1975-ம் ஆண்டு உத்தேசிக்கப்பட்டது.

உத்தேசிக்கப்பட்ட சட்டம் இந்திய அரசியல் சட்டத்தின் ஒருங்கியல் சட்டமன்ற அதிகாரப் பட்டியலில் இடம் பெறுவதால் (Concurrent Legislative Field) இம்மசோதா மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. ஆனால் மத்திய அரசு இவ்வகைக் கால்நடை நடமாட்டக் கட்டுப்பாடு ஒரு மாநிலத்திற்கு மட்டும் ஏற்கப்படுமானால் மற்ற மாநிலங்களும் இவ்வகைக் கோரிக்கையினை முன்வைக்கும் என்றும், அதனால் வளர்க்கப்படும் கால்நடைகளின் நடமாட்டத்திற்குத் தடங்கல் எற்படும் என்றும் சுட்டிக்காட்டியது. மேலும் பயனற்ற கால்நடைகளின் நடமாட்டக் கட்டுப்பாடு அம்மாநிலத்தின் நலனுக்கு உகந்ததாயிராது என்றும், அத்துடன் கால்நடை தீவனம் மற்றும் பசுந் தீவனம் போன்றவை கிடைப்பதில் சிரமங்களை ஏற்படுத்தும் எனவும் மத்திய அரசு குறிப்பிட்டது. எனவே, மத்திய அரசு, ஆலோசனைப்படி குஜராத்தில் உள்ளது போல் பயனற்ற கால் நடைகளையும், வளர்ப்பதற்காக குறிப்பிட்டுள்ள எண்ணிக்கை வரை கறவை மாடுகளையும் மற்ற மாநிலங்களுக்குக் கொண்டு செல்ல அமைதி வழங்க வகை செய்து ''தமிழ்நாடு கால்நடை (நடமாட்டக் கட்டுப்பாடு) அவசரச் சட்டம்'' என்ற பெயரில் ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்க உத்தேசிக்கப்பட்டது. இவ்வசரச் சட்டத்தினைக் கொண்டுவருவதற்கு குடியரசுத் தலைவரின் முன் அனுமதி பெற மத்திய அரசுக்கு 24-5-75-ம் தேதி கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது.

சில மாநிலங்களைப் பொறுத்தவரை கால்நடை நடமாட்டத் திற்கு மத்திய அரசு இணக்கம் தெரிவித்திருந்தாலும் அன்றைய சூழ்நிலையில் ஆரோக்கியமான கால்நடை வளர்ச்சிக்கு நாடு தழுவிய பொது விற்பனைத்தலம் தேவை என்றும், கால்நடை நடமாட்டத்திற்கு எவ்விதமான தடையும் கூடாது என்பதற்கான நிலை ஏற்பட்டுள்ளது என்றும் பிராந்திய உணர்வுகள் விரும்பத் தக்கவையல்ல என்றும் மத்திய அரசு 1976 ஏப்ரலில் தெரிவித்தது. இச்செயற்குறிப்பின் தொடர்புடைய எல்லா அம்சங்களையும் கருத்திற்கொண்டு தேவையெனில் புதிய செயற் குறிப்புகள் அனுப்பலாமெனவும் மத்திய அரசு தெரிவித்தது.

1976 ஜூலையில் நமது மாநிலத்தில் பசு பாதுகாப்பிற்குத் தகுந்த நடவடிக்கைகள் உள்ளனவா என ஆராயும்போது, மாநில எல்லைக்கப்பால் கால்நடைகள் கொண்டு செல்லப்படுவது பற்றி ஆராயப்பட்டது. உணவு மற்றும் வேளாண்மை நிறுவனத்தின் (Food and Agricultural Organisation) அறிக்கையில் (1975 ம் ஆண்டு) தமிழ் நாட்டில் மாடுகளின் எண்ணிக்கையினை குறைத்து செம்மறி

1979 மார்ச் 19] *[செல்வி பி. டி. சரஸ்வதி]*

ஆடு, வெள்ளாடு, பன்றி மற்றும் கோழி இவற்றின் சதவிதத்தினை அதிகரிக்க வேண்டுமென்று பரிந்துரைக்கப்பட்டது. அவ்வறிக்கை, தீவனப் பற்றாக்குறை ஏற்படுமெனவும், ஆகவே மாடுகளின் தொகையினை 50% அல்லது அதற்குமேல குறைக்க வேண்டு மெனவும் பரிந்துரை செய்துள்ளது. இப்பிரச்சினையினை ஆழ்ந்து ஆராய்ந்தபின் செயற்கையான தடை மூலம் மாநிலங்களுக் குள்ளான மாட்டு வியாபாரத்தில் குறுக்கிடுவது நல்லதல்ல எனக் கருதப்பட்டது.

1976 ம் ஆண்டில் கால்நடைகளின் நடமாட்டம் பற்றித் புள்ளி விவர ஆய்வு நடத்தியபோது வெளிமாநிலங்களுக்குக் கொண்டு செல்லப்படும் மாடுகளில் 90 சதவிகிதத்திற்கு மேற்பட்ட மாடுகள் தரம் குறைந்த, பயனற்ற, மற்றும் வயதான, இம் மாநிலத்தில் விலை போகாத மாடுகள் என்று அறியப்பட்டது. இப்படிப்பட்ட பயனற்ற மாடுகளைத் தக்கவைத்துக் கொள்வதால் கால்நடை தீவனப் பஞ்சம் ஏற்படுமெனவும் இவைகளை இம்மாநிலத்தைவிட்டு வெளியே கொண்டு செல்ல அனுமதிப்பதன் மூலம் கால்நடை தீவன விரயம் தடுக்கப்படலாம் எனவும் அறியப்பட்டது. மேலும், தற்பொழுது நமது மாநிலத்திற்குப் பிற மாநிலங்களிலிருந்து தரமான கால்நடைகள் கிடைக்கப் பெறுகின்றன.

மேலே குறிப்பிட்ட காரணங்களால் இம்மாநிலத்தில் இருந்து பிற மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லும் மாடுகள் நடமாட்டம் பற்றி தடை விதிக்க சாத்தியக் கூறில்லை.

பொதுவாக, இறைச்சியின் விலையேற்றத்திற்கான காரணங்கள் பின்வருமாறு:

(1) கால்நடைகளும், இறைச்சியும் பிறமாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

(2) பருவ மழை தவறாமல் பெய்வதால், கால்நடைகளின் மேய்ச்சலுக்கு ஏற்றவகையில் புல்வெளி நிலங்கள் அதிக அளவில் உள்ளன. அதனால், விற்பனைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை குறைந்துள்ளன.

(3) கால்நடைகளின் வணிகத்தில் பெருமளவில் ஈடுபட்டுள்ள சிலர் கால்நடை விற்பனையைக் கட்டுப்படுத்துவதாகத் தெரிகிறது.

கால்நடை போக்குவரத்தை கட்டுப்படுத்துவதில் சில பிரச்கினைகள் ஏற்படுகின்றன. அரிசி மற்றும் கோதுமை போன்றவைகளுக்கு நாடு முழுவதும் ஒரே மண்டலமாக்கி. உணவு தானிய போக்குவரத்து கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது. கால்

நடைகள் பிற மாநிலங்களுக்கு கொண்டு செல்வதை தடை செய்தால் அண்டைமாநிலங்களும் அம்முறையை கையாளும், அதனால் ஆந்திராவிலிருந்து சென்னை நகரத்திற்கு கொண்டு வரப்படும் கால்நடைகள் நிறுத்தப்படும். கால்நடைப் போக்கு வரத்தை தடைப்படுத்துவதால் கால்நடைகளின் விற்பனை விலையேறி கால்நடை விவசாயிகள் பாதிக்கப்படுவர்.

பண்டங்களின் விலையை, குறிப்பாக இறைச்சியின் விலையைக் கட்டுப்படுத்துவதன் மூலம், அவ்வணிகத்தில் ஈடுபட்டுள்ளோர் அது சம்பந்தமாக உரிமம் பெறுவதையும், தங்களிடமுள்ள இருப்பு சம்பந்தமான விவர அறிக்கை அரசு அதிகாரிகளுக்கு அனுப்பு வதையும் ஒழுங்குபடுத்த முடியும். இதன் மூலம் பதுக்கலைத் தடுக்கலாம்.

இறைச்சி விலையைக் கட்டுப்படுத்த, அங்காடிக்கு வருகின்ற கால்நடைகளின் விற்பனை விலைக்கு உச்ச வரம்பு விதிக்க வேண்டும். மாநிலங்களுங்கிடையே கால்நடைகளின் போக்கு வரத்தை தங்கு தடை இன்றி அனுமதித்தால் கால்நடைகளின் விற்பனை விலையை ஒரே சீராக வைத்துக்கொள்ள வாய்ப்புண்டு. ஆனால் நடைமுறையில் இதைச் செயல்படுத்தச் சாத்தியமில்லை.

சட்டரீதியில் இறைச்சியின் விற்பனை விலையை அறுதியிடுவது சம்பந்தமாக ஆராயப்பட்டது. நிலைமைகளையொட்டி விலைகள் தாமாகவே நிலை பெறுமாறு விட்டுவிடலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

தரமான இறைச்சி மலிவான விலையில் கிடைப்பதற்காக இவ்வரசு 47 கோடி ரூபாய் செலவில் ஒரு ஆடு வளர்ப்புத் திட்ட அறிக்கையினை தயார் செய்து மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. இத்திட்டம் உலகவங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும். இத்திட்ட அறிக்கை கீழ்க்கண்டவகைளுக்கு வகை செய்கிறது:

1) 33,000 ஆட்டினப் பிரிவுகளை ஏற்படுத்துதல்;

2) தீவிர ஆடு வளர்ப்புத் திட்டம் ஏற்படுத்துதல்;

3) பெரும் அளவில் ஆடுகளைப் பாதிக்கும் குடற்புழுக்களை நீக்குதலின் மூலம் இறைச்சி உற்பத்தியைப் பெருக்குதல்;

4) பெரிய அயலின ஆடு வளர்ப்புப் பண்ணை நிறுவுதல்;

5) கலப்பின ஆடு வளர்ப்புப் பண்ணை நிறுவுதல்;

6) ஆட்டிறைச்சிக் கொட்டில்களை நவீனப்படுத்துதல்.

இத்திட்டம் ஆறு ஆண்டுகளில் செயல்படுத்தப்படும். தற்பொழுது தமிழ் நாட்டில் ஆண்டொன்றுக்கு 24 இலட்சம் செம்மறியாடுகளும் 19 இலட்சம் வெள்ளாடுகளும் இறைச்சிக்காக

1979 மார்ச் 19] [செல்வி பி. டி. சரஸ்வதி]

கிடைக்கின்றன. இத்திட்டத்தின் மூலம் இறைச்சிக்காகக் கிடைக்கும் ஆடுகளின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு அதிகரிக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

வருடம்.	ஆட்டுக் கிடா.	பெட்டை ஆடுகள்.
	(எண்ணிக்கை இலட்சத்தில்.)	
முதல் ஆண்டு	2·97	7·92
இரண்டாம் ஆண்டு	4·29	10·56
மூன்றாம் ஆண்டு	6·27	13·86
நான்காம் ஆண்டு	8·58	18 48
ஐந்தாம் ஆண்டு	11·22	23·75
ஆறாம் ஆண்டு	16·50	36·30

மேலும் இறைச்சி சுகாதார முறைப்படி குறைந்த விலையில் கிடைப்பதற்கு தனி நிறுவனம் ஒன்று நிறுவி நவீன இறைச்சிக் கொட்டில் ஒன்று நிறுவி (Modern Abattoir) ஏற்படுத்தும் திட்டம் செயல்படுத்த அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் ஆட்டிறைச்சி மலிவான விலையில் மக்களுக்குக் கிடைக்குமென அரசு எதிர் பார்க்கிறது.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்; தலைவர் அவர்களே, ஆட்டு இறைச்சியின் விலை கூடுதலாகியுள்ளதைப் பற்றி கவனத்திற்கு கொண்டு வருகிறபோது, ஒன்றை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். 74—லே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்ற பதிலின் விவரங்களுக்குள்ளே நான் போக விரும்பவில்லை, கடந்த இரண்டு மாத காலமாக, இந்த ஆட்டு இறைச்சி அதிகமான விலைக்கு விற்கப்படுகிறது. கிலோ ரூ. 10 என்றிருந்தது, இப்போது கிலோ ரூ. 20-க்கு விற்கப்படுகிறது. சராசரி தமிழ் நாட்டில் ஒரு நாளைக்கு 5 லட்சம் கிலோ தேவைப்படுகின்றது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படியானால், தினசரி 50 லட்சம் ரூபாயை இங்குள்ள மக்கள் அதிகமாக தர வேண்டியிருக்கிறது. அது மாத்திரமல்ல. இப்படிக் கணக்குப் பார்த்தால், மாதம் ஒன்றுக்கு 15 கோடி ரூபாய் என்றும், ஆண்டு ஒன்றுக்கு 180 கோடி ரூபாய் என்றும் வருகிறது. இரண்டு கோடி ரூபாய் மக்கள் மீது வரி போட்டதற்கே உணர்வு கொள்ளுகின்ற அமைச்சர் அவர்கள், இப்படி 180 கோடி ரூபாய் கொடுக்கின்ற அளவிற்கு, அதிலும் கடந்த இரண்டு மாத காலமாக இப்படிப்பட்ட ஒரு பெரிய அளவில் நிலைமை ஏற்பட்டிருக்கிறதை, இதனால் எந்த அளவுக்கு தமிழக மக்கள் பாதிப்பார்கள் என்பதை கவனிக்க வேண்டும். தமிழ்நாட்டிலே தான் இந்த இறைச்சி சாப்பிடுகின்றவர்கள் ஜாஸ்தி.

[1979 மார்ச் 19

[முற்பகல் 11·40]

இது எப்படி பாதிக்கும் என்பதையும் இது சம்பந்தமாக அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதையும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாடுகளைக் கேரளாவுக்கு ஓட்டிக்கொண்டு செல்லுகிறார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பொது விவாதத்தில் இதைப்பற்றி எல்லாம் பேசலாம். இல்லையென்றால் திரு. அம்பிகாபதி அவர்கள் பொது விவாதத்தில் தன்னுடைய நேரத்தைக் குறைத்துக் கொள்ளவேண்டும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: மாடுகள் கேரளாவுக்குப் போய்க் கொண்டே இருக்கின்றன. எங்கள் ஜில்லாவில் விவசாயிகள் காசு கொடுத்து மாடு வாங்க முடியாத நிலைமையில் ஓட்டிப் போகிற மாடுகளை மறித்து உழலாமா என்ற நிலைக்கு வந்திருக்கிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: மற்ற மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகிற மாடுகளின் எண்ணிக்கையை ஆராய்ந்து பார்த்தபோது அவை 90 சதவிகிதம் பயனற்ற மாடுகள் அல்லது இந்த ஊரில் விலை போகாத மாடுகள் என்ற காரணத்தாலும், மத்திய அரசு மாநிலங்களுக்கு மத்தியில் கால்நடைகள் நடமாட்டம் இருக்கவேண்டுமென்று கருத்துத் தெரிவித்திருக்கும் காரணத்தாலும் இதைத் தடைசெய்வதற்தில்லை என்ற கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

இறைச்சியில் விலைவாசியைக் கட்டுப்படுத்துவது பற்றிச் சொன்னார்கள். எனக்குக் கொடுக்கப்பட்டிருப்பது கால் நடைகளைப் பராமரிக்கும் இலாகா. நான் இதுகுறித்து மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களிடம் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அவர்கள் மத்திய அரசுக்குத் தகவல் அனுப்பியிருக்கிறார்கள், இந்த மாநிலத்திலிருந்து அடுத்த மாநிலத்திற்கு அல்ல — தமிழகத்தில் இருந்து அடுத்த நாடுகளுக்கு கால்நடைகள் கடத்தப்படுவதை நிறுத்த வேண்டுமென்று.

திரு. செ. சிவசாமி: அமைச்சர் அவர்கள் சொல்லுகிற நேரத்தில் உதவாக்கரை மாடுகள் ஓட்டிச் செல்லப்படுகின்றன என்று சொன்னார்கள். கேரளத்தில் இந்த மாடுகளின் இறைச்சியைத் தயார் செய்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்புகிறார்கள். தோல்களை எல்லாம் பதப்படுத்த நல்ல

முறையில் பெரிய பாக்டரிகளை உண்டாக்கியிருக்கிறார்கள். அந்தத் தோல்களைக் கொண்டு ஏன் நம்முடைய தமிழகத்திலேயே ஒரு டானிங் இண்டஸ்ட்ரியை ஏற்படுத்தக் கூடாது. அந்த இறைச்சியைப் பதப்படுத்தி நாமே ஏன் வெளிநாடுகளுக்கு அனுப்பக்கூடாது? எலும்பை பாஸ்பேட் உரத்திற்கு ஏற்ப பயன்படுத்திக் கொள்ளக்கூடாது? உதவாக்கரை மாடுகளானாலும் இறைச்சி, தோல், எலும்பு இருக்கிற காரணத்தால் அதைப் பயன்படுத்தி தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்பட வழி செய்வார்களா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: கேள்வி இடம் மாறி வந்திருக்கிறது, எனக்குக் கொடுக்கப்பட்டிருப்பது கால்நடை வளர்ப்பு பற்றியது. அவற்றின் உயிரைப் பறிக்கிற அதிகாரம் எனக்கு இல்லை.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: ஆடுகளும் மாடுகளும் அண்டை மாநிலங்களுக்கு அனுப்பப்படுவதன் காரணமாக தமிழகத்தில் கால்நடைச் செல்வங்கள் நாளுக்கு நாள் அழிந்து கொண்டு வருவதை கால்நடைப் பராமரிப்புத் துறை, வளர்ப்புத் துறை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? கால்நடைச் செல்வங்கள் இல்லாமல் விவசாயிகள் தவிப்பதைப் பற்றிக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. இன்றைக்கு மாடுகள் பெருமளவில் நாட்டில் குறைந்து வருவதன் காரணமாக விவசாயிகள் தங்களுடைய விவசாயத் தொழிலுக்கு மாடுகளை வாங்க முடியாத அளவுக்கு விலையேற்றத்தின் காரணமாக அவர்கள் அவதிப்படுகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? இன்றைக்கு ஆட்டிறைச்சியைப் பொறுத்தவரை சேலத்திலுள்ள மேச்சேரி, திருச்செங்கோடு, ராசிபுரம் அறுசுவைக்குப் பேர் போனது, அந்தப் பகுதியிலேயே ஆட்டிறைச்சி கிடைப்பது அரிதாக இருக்கிறது. இதன் காரணமாக அந்தப் பகுதியில் குடிசைத்தொழில் தோல்பதனிடும் தொழில் பாதிக்கப்படுவதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? ஆகவே, அண்டை மாநிலங்களுக்கு ஆடு மாடுகள் கடத்தப்படுவதை தடுக்க விரிவான சட்டம் கொண்டு வர அமைச்சர் அவர்கள் ஆலோசிப்பார்களா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: ஆந்திரத்திற்கு ஆடுகள் அனுப்பப்படுகின்றன. அதே நேரத்தில் ஆந்திரத்திலிருந்து தரமான கால்நடைகள் இங்கு கொண்டு வரப்படுகின்றன. குறிப்பாக இங்கே தோலைப் பற்றிச் சொன்னார்கள். முதல் கேள்வியிலேயே அதற்கான பதிலைச் சொல்லியிருக்கிறேன். அதற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர் நான் இல்லை. அவர்கள் எண்ணிக்கையைப் பற்றிச் சொல்லுகிறார்கள். நான் மாடுகளின் தரத்தைப் பற்றிச் சொல்லுகிறேன். இந்த அரசு பொறுபேற்ற பிறகு ஒவ்வொரு மாவட்ட கால்நடைப் பண்ணையிலும்

ஒவ்வொரு விதமான கால்நடைகளை வளர்க்க முயற்சி எடுத்துள்ளோம். குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் ஆஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதி செய்துள்ள மாடுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் முன்பு 52 கால்நடைகளை அனுப்பியிருந்தார்கள். இப்போதும் 100 கால்நடைகளை அனுப்பியிருக்கிறார்கள். இப்படி முழுக்சு முழுக்க தரமான கால்நடைகளை வளர்க்கிற முறையிலே நீலகிரி மாவட்டத்திலே ஜெர்ஸி ஹாஸ்டீன் ஒசூர் பகுதியிலே சிந்தி, ஜெர்ஸி கலப்பினக் கால்நடைகளையும் உருவாக்கி வருகிறபோது தரமற்ற கால் நடைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியதில்லை. தரமுள்ள மாடுகளை அதிகரிக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த இலாகா தீவிரமாகச் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்; தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி விலையைப்பற்றித்தான். ஆடு வளர்ப்பு பற்றி, மாடு வளர்ப்பு பற்றி கேட்கவில்லை. நாளைக்கு யாரிடம் கேட்பது என்பதைத் தலைவர் தெரிவிக்கவேண்டும். ஆட்டினுடைய விலை பற்றியும், மாட்டினுடைய விலை பற்றியும் தான் கேள்வி கேட்டிருக்கிறேன், அப்படியானால் வேறு அமைச்சர் அதை எடுத்துக்கொண்டு பதில் சொல்லியிருக்கலாமே, யாரிடத்திலே கொடுக்கவேண்டுமென்று தெரிவிக்கவேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: நாங்கள் கவன ஈர்ப்புக் கொடுப்பதன் அடிப்படை நோக்கம் கால்நடைச் செல்வங்கள் அழிந்து போகாதபடி தடுக்கப்படவும், அதன் மூலமாக குடிசைத் தொழில்களான ஆட்டு ரோமம், கம்பளம் தயாரிக்கும் தொழில்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகவும் கொண்டு வருகிறபோது அமைச்சர் பாதிப் பொறுப்புத்தான் எனக்கு இருக்கிறது, மீதி பாதி மற்றொரு அமைச்சருக்கு இருக்கிறது என்று சொல்கிறார்களே, சரியா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்; திரு கூத்தகுடி சண்முகம் அவர்கள் சொன்னதுபோல் எந்த இலாகா என்று பரிசீலித்து முடிவு எடுக்கிறேன்.

திரு.துரை முருகன்: தலைவர் அவர்களே, அவர்கள் எல்லாம் 41இல் கொடுத்தார்கள், கேள்வி கேட்டார்கள், பதில் சொல்கிறார்கள் நான் கொடுக்கவில்லை, ஆகவே கேள்வி கேட்கவில்லை, ஆனால் முக்கியமான ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாடுகள் கேரளாவிற்கும் ஆடுகள் ஆந்திராவிற்கும் கடத்தப்படுவதால், சென்னை மாநகரத்திலே

1979 மார்ச் 19] [திரு. துரை. முருகன்]

ஆட்டு ஈரலுக்குப் பதிலாக, நாய் ஈரல் போடுகிறார்கள் என்று சட்டநாதன் கமிட்டி அறிக்கை கொடுத்திருக்கிறது, அதைப் போக்குவதற்கு சர்க்கார் சட்டம் வைத்திருக்கிறதா?

திரு. க. சுப்பு: ரொம்ப முக்கியமான விஷயம், ஒன்றே ஒன்று. வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தஞ்சாவூரிலே பேசும்போது மத்திய அரசு நெல்லுக்கு 130 ரூபாய் விலை கொடுக்கவில்லையென்றால் அமைச்சர்கள் உண்ணாவிரதமிருப்பார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள் இருக்க வேண்டியதுதான், நாங்கள் அதை வரவேற்கிறோம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லவேண்டியது என்ன என்று மாத்திரம் சொல்லுங்கள், பிரச்சினையைப் பேசிக் கொண்டே போகிறீர்களே, எனக்குத் தெரியாதது போலவும் தாங்கள் விளக்குவதைப் போலவும் சொல்கிறீர்களே, சரிதானா?

திரு க. சுப்பு; ஏற்கனவே விதி 42 இன் கீழ் புதுக்கோட்டை மாவட்டம் விறாலிமலையிலே விவசாயிகள் கடன் வசூல் கெடுபிடி தாங்காமல் அதன் காரணமாக அவர்கள் அல்லலுக்கு ஆளாகியிருப்பதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு 42 பேர்கள் அங்கே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், அதனால் பதட்ட நிலைமை இருக்கிறது என்று தீர்மானம் சனிக்கிழமை கொடுத்திருந்தேன். ஆகையினாலே அமைச்சர்கள் உண்ணாவிரதம் இருப்போம் என்று அவர்கள் சொல்லி இருக்கிறார்கள் எப்பொழுது ஆரம்பிக்க இருக்கிறார்கள் என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் கொடுத்திருப்பது முற்றுகையிடுவதாகத் தகவல் வருவதால் என்றுதான் கொடுத்திருக்கிறீர்கள், ஆகவே பதட்ட நிலமை இருக்கிறதா என்று இலாகா மூலம் விசாரித்து கொண்டு சொல்கிறேன், உட்காருங்கள்.

திரு. துரைமுருகன்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எப்போதும் எழுந்து இருக்கலாம், எனவே அப்படிச் சொல்லிக்கொண்டு தாங்கள் எழுகிறீர்கள்.

திரு. துரைமுருகன்; இம்பார்ட்டண்ட் பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், கேளுங்கள் மிகமிகப் பரபரப்பான சூழ்நிலை வெளியில் நடந்து கொண்டிருக்கிறது. நூற்றுக்கணக்கான சட்டக் கல்லூரி மாணவர்கள் கோட்டைக்கு ஊர்வலமாக வந்து கைது

[திரு. துரை. முருகன்] [1979 மார்ச் 19

செய்யப்பட்டு லாரியிலே அவர்களை ஏற்றிக்கொண்டிருக்கிறார்கள். கோட்டைக்கு ஊர்வலம் வந்தாலும் கைது என்ற முறையிலே ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்ற மாதிரி, (மணியடிக்கப்பட்டது) என்னைப் பேச வேண்டாமென்றால் சொல்லுங்கள், அதற்காக அடிக்கடி மைக்கை ஆப் செய்வது எனக்கு அவமானமாக இருக்கிறது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்; நான் மணி அடித்தாலே அவர்கள் ஆப் செய்ய வேண்டும் அதுதான் முறை. தாங்கள் சொல்லியிருக்கிறீர்கள், அரசாங்கம் கவனத்தில் எடுத்துக் கொள்ளும்.

திரு. துரைமுருகன்; அப்படியானல், சர்க்கார் என்ன பதில் சொல்லுகிறது என்று கேளுங்களேன்.

[முற்பகல் 11.50]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சட்டக் கல்லூரியைப் பொறுத்தவரையில் விடுமுறை அளிக்கப் பட்டு விட்டது. ஆகவே, மாணவர்கள் இங்கே இருக்கிறார்களா இல்லையா என்பது தெரிந்து சொல்லவேண்டிய விஷயம்.

திரு. துரைமுருகன் : இப்பொழுது வெளியிலே போய்க் கொண்டிருக்கிறார்கள்.

7. வரவு-செலவுத் திட்டம் 1979-80—பொதுவிவாதம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் ஒரு குறையைச் சொல்ல விரும்பு கிறேன். எங்களுக்கு உரிய நேரம் கிடைக்காமல் போகிறது. ஆகையால் இன்றைக்கு அந்த நேரத்தைக் கொடுத்துப் பேசச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 100 நிமிடங்கள் இருக் கின்றன, நான் எப்படிச் செய்யமுடியும்? அடுத்து, 1979-80-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவரவர்களே, 1979-80-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்தைக் கூற விரும்புகிறேன்.